*சிந்தனை*
*வெள்ளிவிழாச் சிறப்பிதழ் - 1999*

# சர்வதேசரீதியான தொழிலாளர் குடிப்பெயர்வும் விளைவுகளும்

மா. செ. மூக்கையா

சர்வதேச வர்த்தகம், சர்வதேச ரீதியான மூலதனப் பெயர்ச்சி இவை இரண்டும் அவை ஆரம்பிக்கின்ற நாடுகளுக்கும், இறுதியாகச் சென்றடையும் நாடுகளுக்கும் நன்மைகளை அளிக்கின்றன. அவற்றைப் போன்றே சர்வதேச ரீதியாக ஏற்படுகின்ற தொழிலாளர் இடப்பெயர்வும், அவர்கள் எங்கிருந்து சென்றார்களோ அந்நாடுகளுக்கும் எங்கு செல்கின்றார்களோ அத்தகைய நாடுகளுக்கும் நன்மைகளை அளிக்கின்றன. குடிபெயரும் பண்பினையுடைய தொழிலாளர்கள் பெரும்பாலும் கூடிய உற்பத்தித் திறனை கொண்டவர்களாக இருப்பார்கள். அதனால் அவர்கள் சென்றடையும் நாடுகளில் தொழிலாளர்களுக்கான செலவுகள் குறைகின்றன. அவர்கள் பெரும்பாலும் வறுமையான நாடுகளிலிருந்தே செல்கின்றனர். அதனால் தாம் உழைக்கும் வேதனங்களை தமக்கும் தமது உறவினர்களுக்குமாக பின்னர் தமது தாய் நாடுகளுக்கே எடுத்துச் செல்வதனால் அந்நாடுகளின் வருமானம் உயர்வடைகின்றது. இவ்வாறான நன்மைகள் ஏற்படுகின்ற அதேநேரத்தில் சில பிரச்சினைகளும் ஏற்படாமலில்லை. இவர்கள் குடிபெயர்ந்து சென்றடையும் நாடுகளில் உள்ள தொழிற்பயிற்சியற்ற தொழிலாளர்களுக்கு இவர்களால் வேலைவாய்ப்புகள் குறைவடைவதுடன் அம்மட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கான வேதனங்கள் வீழ்ச்சியடையும் ஆபத்தும் உண்டு. உயர் தொழில் பயிற்சி பெற்றோரைப் பொறுத்த மட்டில் அவர்கள் கூடிய வேதனங்களைப் பெற்றாலும் குடிபெயர்ந்து வருபவர்கள் காரணமாக உள்நாட்டுத் தொழிற் கொள்கைகளில் கடுமையான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்ற குற்றச்சாட்டும் உண்டு.[1]

வர்த்தகம், மூலதனம் என்பன போலன்றி சர்வதேச ரீதியான தொழிலாளரது இடப்பெயர்வு அரசியல் ரீதியான பல கெடுபிடிகளுக்கு ஆளாக நேரிடுகின்றது. இவர்கள் சென்றடையும் நாடுகளில் பொதுவாக குடிபெயர்ந்து வரும் தொழில்பயிற்சியற்ற தொழிலாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான தொழிலாளர்களால் தமது தொழில் வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டுவிடுமோ என அந்நாடுகளில் உள்ள தொழில் பயிற்சியற்ற வகையினைச் சார்ந்த தொழிலாளர்கள் திகைத்து நிற்கின்றனர். [2]

இவ்வாறாக இடம்பெயரும் தொழிலாளர்கள் சென்றடையும் நாடுகளில் அங்குள்ள வேதனங்களின் ஏற்றத்தாழ்வுகளுக்கு இவர்கள் தான் காரணமாகின்றார்களா? என்பதனையும் அந்நாடுகளின் வரவு செலவு திட்டங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றனரா? வறுமையான நாடுகளின் பயிற்சிபெற்ற தொழிலாளரது இடப்பெயர்வினைத் தவிர்க்க முடியுமா? என்பன போன்ற பிரச்சினைகளை பற்றிய சில கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

வரலாற்றுக் காலம் முதலாகவே சமூகங்களில் காணப்பட்ட சமூக பொருளாதார முரண்பாட்டு நிலைமைகளையும் இடர்தியான மூலவள வேறுபாடுகளினையும் சமாளிப்பதற்காக தொழிலாளர்களை பற்றாக்குறையாகக் கொண்ட பகுதிகளை நோக்கி தொழிலாளர் இடப்பெயர்வு ஏற்பட்டமைக்கு போதிய சான்றுகள் உள்ளன. வழக்கமாக நீண்ட தூரப் பயணங்களுக்கான செலவுகளும் இடையூறுகளும் காரணமாக இவ்வாறான தொழிலாளர் இடப்பெயர்வு கட்டுப்பாடுகளை எதிர் நோக்கியிருந்தது.[3]

பல தரப்பட்டதும் அதிகரித்த அளவினதுமான பல்வேறு கட்டுப்பாடுகள் நாடுகளில் குடிவரவுக்கெதிராக அறிமுகப் படுத்தப்பட்டன. இருந்த போதிலும், இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மலிவான போக்குவரத்தின் அறிமுகம் காரணமாக, பின்வந்த காலங்களில் தொழிலாளர் குடிப்பெயர்வு பெருமளவில் ஏற்பட்டது. உலகம் முழுவதிலும் தொழிலாளர்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளும் இறக்குமதி செய்யும் நாடுகளும் இன்று அதிகரித்துள்ளன. இதனால் உலகில் குறைந்தது 125 மில்லியன் மக்கள் இப்போது தமது தாய்நாட்டிற்கு வெளியே வாழுகின்றனர். குடிபெயர்ந்து வருவோர் பெரிதும் வறுமையான நாடுகளிலிருந்தே வருகின்றனர். இவர்கள் தொழில்புரியச் செல்லும் நாடுகளில் தங்கிவாழும் காலம் அண்மைக் காலங்களில் படிப்படியாக குறைந்து செல்கின்றது.

மறுபுறத்தில் உயர் தொழில் பயிற்சி பெற்றவர்கள் தொழிலுக்காக குடிபெயருதலும் அதிகரிப்புக்குள்ளாக்கியுள்ளது. அது போன்றே அகதிகளின் எண்ணிக்கையும் பெருமளவில் அதிகரித்து உள்ளது. பிரதேசங்களுக்கு இடையேயான முரண்பாடுகளும் முன்னர் காணப்பட்ட கிழக்கு - மேற்கு ஒழுங்கு தகர்க்கப்பட்டமையும் காரணமாக ஏற்பட்ட குளறுபடிகளினாலேயே அகதிகள் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.[4]

உலகக் குடிப்பெயர்வில் ஐம்பது வீதமானது விருத்தி பெரும் நாடுகளுக்கிடையே தான் ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் நோக்கிச் செல்லும் தென்னாசிய தொழிலாளர்களின் குடிப்பெயர்வுகள், புதிதாகக் கைத்தொழிலாக்கம் பெற்ற கிழக்காசியா நோக்கிய குடிப்பெயர்வுகள், ஒப்பளவில் சில அபிவிருத்தி நடவடிக்கைகளில் வெற்றி கண்ட உபசகரா நாடுகள் நோக்கிய ஆபிரிக்கக் குடிப்பெயர்வுகள் போன்ற யாவுமே அவ்வாறானவையாகும். சுபீட்சமுற்ற இப்பிரதேசங்கள், வறுமையான அயலவர்களைக் கவருகின்றன. ஆபிரிக்காவில் குடிபெயர்ந்தவர்களில் ஐம்பது வீதமானோர் ஐவறிகோஸ்ட், நைஜீரியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கே சென்றுள்ளனர். 1980 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தமது நாட்டிலிருந்து குடிபெயர்ந்தவர்களில் பெருமளவினர் இப்போது தாய்நாட்டிற்கு திரும்பிவிட்டனர்.[5]

நிலநெய்யின் விலை 1982 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைவதற்கு முன்னர் குறிப்பாக 1970 ஆம் ஆண்டுகளிலும் 1980 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலங்களிலும் வளைகுடா நாடுகள் நோக்கி தற்காலிகமாகக் குடிபெயர்ந்து வருபவர்களைக் கவரும் சூழ்நிலைகள் பெருமளவில் காணப்பட்டதால் கணிசமானோர் அந்நாடுகளுக்கு சென்றனர். 1991 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வளைகுடா யுத்தம் காரணமாக ஒரு மில்லியன்

எகிப்தியர்கள் ஈராக்கை விட்டு வெளியேறினார்கள். எட்டு இலட்சம் யேமன் மக்கள் சவூதி அரேபியாவை விட்டு வெளியேறினார்கள். குவைற்றைவிட்டு ஐந்து இலட்சம் எகிப்தியரும் ஆசிய மக்களும் வெளியேறினார்கள். இதனால் ஏற்பட்ட இடைவெளியை பாலஸ்தீனியர்களும், ஜோர்தானியரும் பூர்த்தி செய்தனர். மிக அண்மைக் காலங்களில் ஜப்பான், தென் கொரியா, மலேசியா போன்ற நாடுகளில் தற்காலிக தொழிலாளர்களுக்கு கேள்வி அதிகரித்துள்ளது. சோவியத் யூனியனின் சிதறலோடு ஐரோப்பாவின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஏற்பட்ட பாரிய குடித்தொகை அசைவும் குறிப்பிடத்தக்க தாகும்.[6]

விருத்தி பெறும் நாடுகளிலிருந்து கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளுக்கு இப்போது குடிப்பெயர்வு ஏற்பட்டு வருகிறது. அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் நோக்கி விருத்தி பெறும் நாடுகளில் இருந்து ஏற்பட்ட குடிப்பெயர்வு படிப்படியாக அதிகரித்துள்ளது. 1993 ஆம் ஆண்டில் ஒன்பது இலட்சம் பேர் குடிபெயர்ந்துள்ளனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளினது பொருளாதார சுபீட்ச காலமான 1960ஆம் ஆண்டு காலங்களில் அந்நாடுகளுக்கு பெரியளவில் தொழிலாளர்கள் திரட்டப்பட்டனர். ஆனால் 1973 ஆம் ஆண்டில் பெற்றோலிய விலை உயர்வின் காரணமாக அந்நாடுகள் எதிர்நோக்கிய பொருளாதார வீழ்ச்சியோடு அத்தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப் பட்டனர். 1980 ஆம் ஆண்டுகளில் மீண்டும் ஆரம்பித்த குடிவரவுகளினால் வருடாந்தம் 180,000 பேர் இந்நாடுகளுக்கு வரத் தொடங்கினர். 1960 ஆம் ஆண்டுகளைப் போலன்றி இக்காலப்பகுதியில் ஏற்பட்ட குடிவரவு அந்நாடுகளில் அதிகரித்து சென்ற வேலையில்லாப் பிரச்சினை காரணமாக குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அந்நியர் மீது வெறுப்பினை காட்டியதால் குறிப்பிடத்தக்கதான சமுக பதட்டங்கள் தோற்றமுற்றன.[7]

தொழிலாளர்கள் கூடிய உற்பத்தியினை வெளியிடக்கூடிய பகுதிகளுக்கு குடிபெயரும் போது அப்பகுதிகள் கூடிய நன்மையினைப் பெறுகின்றன. இந்நன்மைகள் காரணமாக பல சாராருக்குமிடையேயும் பரவல் விளைவுகள் ஏற்படுகின்றன. ஒரு புறத்தில் குடிபெயர்ந்த தொழிலாளர்கள் உயர் வேதனங்களைப் பெறுகின்றனர். தமது தாய் நாடுகளுக்கு தமது உழைப்பை அனுப்பி வைப்பதனால் அந் நாடுகள் கூடிய வருவாயினைப் பெறுகின்றன. மறுபுறத்தில் இவர்கள் சென்று தொழில்புரியும் நாடுகளில் உற்பத்திச் செலவு குறைவதால் அந்நாடுகளும் நன்மையடைகின்றன. ஆனால் சில சந்தர்ப்பங்களில் அனைவரும் இதனால் நன்மையடைவதாகவும் பொதுமைப்படுத்திக் கூறமுடியாதுள்ளது. குறிப்பாக தொழிற் பயிற்சியற்ற தொழிலாளர்களால் குடிபெயரும் நாடுகளில் உள்ள தொழிற் பயிற்சியற்றவர்களது தொழில் வாய்ப்புக்கள் பாதிக்கப் படுகின்றன. இத்தகைய தொழிலாளர்களின் இடப்பெயர்வு காரணமாக குறுங்கால விளைவுகளும் நடுத்தரக்கால விளைவுகளும் ஏற்படுகின்றன. இவர்கள் அந்நாடுகளின் தொழிலாளர்களுக்கு பிரதியீடாக செல்வார்களேயானால் அந்நாட்டுத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். மாறாக அந்நாட்டுத் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவுபவர்களாக செல்வார்களேயானால் அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பவர்களாக காணப்படுகிறார்கள்.[8]

தொழிலாளர்களின் இடப்பெயர்வு காரணமாக அவர்கள் தமது நாட்டுக்கு அனுப்பும் பணம் மூலம் அந்நாடுகள் நன்மையடைகின்றன. அவ்வாறான நாடுகளின் சிலவற்றின் மொத்த தேசிய வருமானத்தில் கணிசமான பங்கு இவ்வாறாக பெறப்பட்ட வருமானமாகும். ஜோர்தான், லெசெத்தோ, ஏமன், மேற்கு கானாவும் காசாவும் உள்ளடக்கிய பகுதிகளின் மொத்த தேசிய வருமானத்தில் 10 முதல் 50 வீதம் வரையானது தமது நாட்டைவிட்டு வெளிநாடு

களுக்குச் சென்ற தொழிலாளர்கள் தமது குடும்பத்திற்காக அனுப்பி வைத்த பணமாகும். சில நாடுகளின் வெளிநாடு நோக்கிய ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையிலும் கூட இத்தொகை அதிகமாகும். வங்காள தேசம், பக்கினோ பார்சோ, எகிப்து, கிரேக்க நாடு, ஜமெய்க்கா, மாலவி, மொராக்கோ, பாகிஸ்தான், போர்த்துக்கல், இலங்கை, சூடான், துருக்கி ஆகிய நாடுகளில் 25 முதல் 50 வீதம் வரை இவ்வாறான தொழிலாளர்கள் தமது நாட்டுக்கு அனுப்பும் பணத்தினால் பெறப்படுகிறது. 1996ம் ஆண்டு இலங்கையிலிருந்து 162,511 பேர் வெளிநாடுகளுக்கு தொழில் நாடிச் சென்றனர். இலங்கை 1996ம் ஆண்டு ஏற்றுமதிகள் மூலமும் தனிப்பட்டவர்கள் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பிய தமது வருமானம் மூலமும் மொத்தமாக 266,288 மில்லியன் ரூபாவை பெற்றிருந்தது. அதில் 14.8 வீதமான 39,485 மில்லியன் ரூபா பிறநாடுகளுக்குச் சென்ற இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பியதாகும். சர்வதேச ரீதியாக நோக்கும் போது நாடுகளிடையே வேதனங்களின் அளவில் பெறும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பின்தங்கிய நாடுகளிலிருந்து சுபீட்சமான நாடுகளுக்கு தொழில் புரிய செல்வோர் தமது நாட்டில் பெறக்கூடிய வேதனங்களை விட பல மடங்கு அதிகமான வேதனங்களைப் பெறுகின்றனர். பிலிபைன்சை விட தென் கொரியாவில் வேதனங்கள் இரண்டு மடங்கு அதிகமாகவுள்ளன. அதனால் தமது நாட்டிற்கு பெருமளவு பணத்தை அனுப்பி வைக்கக் கூடியதாக இருக்கிறது. இதே நேரத்தில் குடிபெயர்ந்து சென்றவர்கள் தாம் குடியேறிய நாடுகளிலேயே தொடர்ந்தும் வாழத் தீர்மானிக்கும் பட்சத்தில் தாய் நாட்டிற்கு அனுப்பும் தொகையின் அளவில் வீழ்ச்சி ஏற்படுகின்றன.[9]

## தொழிலாளர்களின் தாய்நாடுகளில் காணப்படும் நிலைமைகள்

குடிப்பெயர்வுக்கான காரணங்களை எடுத்துப்பார்த்தால் அவை குடும்ப மட்டங்களில் அவ்வவ் நாடுகளில் நிலவும் இடையூறுகளிலிருந்து தப்பிக் கொள்ள மேற்கொள்ளும் உபாயமாகவே தென்படுகிறது. லெபனானில் 1980 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட யுத்த நெருக்கடிகளினால் அந்நாட்டின் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்தவர்கள் தாம் உழைத்தவற்றை தமது நாட்டிற்கு அனுப்பினர். அதன் காரணமாக அந்நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் இவ்வாறாகப் பெறப்பட்ட வருமானம் 50 வீதமாக இருந்தது. சமூக நல மேம்பாட்டிற்காக அரசுகள், தமது கொள்கையின் அடிப்படையில் இவ்வாறான குடிப்பெயர்வுகள் காரணமாகக் கிடைக்கின்ற நிதியின் மூலம் வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் பளுவானது குறையலாம். 1970 ஆம் ஆண்டுகளில் எகிப்தில் உள்நாட்டில் தொழிலுக்கு உத்தரவாதம் வழங்கும் அரசின் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அந்நாட்டிலிருந்து வளைகுடா நாடுகளுக்கு தொழிலாளர்கள் பெருமளவில் சென்று தமது தாய் நாட்டிற்கு பெருமளவு பணத்தை அனுப்பாமல் இருந்திருந்தால், அத்திட்டத்தினை எகிப்து அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தியிருக்க முடியாது.[10]

குடிப்பெயர்வு காரணமாக வருமான சமன்பாடின்மை நிலைமைகள் மேலும் சிக்கலான நிலைமைகள் உருவாகின்றன. மிகவும் வறுமையான குடும்பங்களில் இருந்து தொழிலுக்காக வெளிநாடுகள் செல்வது மிகவும் குறைவாகும். ஏனெனில் அவ்வாறாக வெளிநாடுகளில் தொழில் பெறுவதற்கு முதலில் பெருமளவு செலவுகள் ஏற்படுவதனால் வறியவர்களினால் அதனை செய்ய முடியாது போகிறது. இதனால் வறுமையான குடும்பங்களில் இருந்து குடிப்பெயர்வு ஏற்படுவது மிகக்குறைவாகும். வசதியான குடும்பங்களில் இருந்து தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் அவர்கள் வசதியான தமது குடும்பங்களுக்கே வெளி

நாடுகளிலிருந்து பணத்தை அனுப்பி வைப்பதனால் இந்நாடுகளில் உள்ள மக்களிடையே வருமான ஏற்றத்தாழ்வு மென்மேலும் அதிகரிப்புக்குள்ளாகிறது. இவ்வாறான வருமான சமமின்மை அதிகரித்து செல்வதனால் ஏற்படக்கூடிய விளைவுளை எகிப்து, பிலிபைன்ஸ் ஆகிய நாடுகளில் இனங்காண முடிகிறது.[11]

இருந்த போதிலும் தொழிலாளரது குடிப்பெயர்வுப் போக்கு அதிகரித்துச் செல்வதனால் முன்னர் போலன்றி குடிபெயருவதற்கான கட்டணங்கள்/செலவினங்கள் இப்போது குறைந்து செல்வதனால் வறுமையான தொழிலாளர்களும் குடிபெயரக்கூடிய வகையிலும் செலவினங்களைச் சமாளிக்கக் கூடிய வகையிலும் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான மாற்றங்களின் பாதிப்புக்கள் பற்றி மெக்சிகோ நாட்டின் இரண்டு கிராமங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு கிராமத்தில் வெளிநாட்டில் இருந்து வருகின்ற பணம் சமமின்மை நிலைமைகள் சீரடைய காரணமாயிருந்தது அறியப்பட்டது. மாற்றொன்றிலோ சமமின்மை அதிகரித்திருந்தமையினையே காணக்கூடியதாயிருந்தது. எவ்வாறாயினும் வெளிநாடுகளிலிருந்து பணம் வருவதால் இரண்டாவது சுற்று வட்டத்தில் சமமின்மையினை நீக்கும் விளைவுகள் ஏற்படலாம் என நம்ப இடமுண்டு. உதாரமாக இவ்வாறு பெறப்பட்ட பணம் காரணமாக பாகிஸ்தானின் கிராமியப் பகுதிகளில் அபிவிருத்திக்கான முதலீடு அதிகரித்தது. இதனால் அங்கே தொழில்பயிற்சி அற்ற தொழிலாளர்களுக்கான கேள்வியும் கிராமியப் பகுதிகளில் அதிகரித்தமையினை குறிப்பிட்டுக் கூறலாம்.

மூளைசாலிகளின் வெளியேற்றம் காரணமாக ஏற்படும் அச்சம் பலநாடுகளில் இப்போது குறைந்து வருகிறது. உயர்தொழில்களுக்கான பயிற்சியினைப் பெற தேவையான கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை அந்நாடுகளில் அதிகரித்து வருவதால் இப்பிரச்சினையின் பளு இந்நாடுகளில் குறைந்து வருகின்றது. ஆனால் தொழிற்சந்தையில் அல்லது கல்வி முறைகளில் குறைபாடுகள் உள்ள நாடுகளில் மூளைசாலிகளின் வெளியேற்றம் தொடர்ந்தும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. சில நாடுகளில் நவீன துறைகளில் விஸ்தரிப்பு குறைவாகக் காணப்படும் அதேவேளையில், உயர்கல்விக்கு அரசினால் மானியங்கள் தாராளமாக வழங்கப்படுவதனால் அந்நாடுகள் பயன்படுத்தக்கூடிய அளவினை விடக்கூடிய அளவில் பட்டதாரிகள் பயிற்றப்படுகின்றனர். இது நாட்டிற்கு பெரும் செலவினங்களை ஏற்படுத்துகின்றது. அதனால் அவர்கள் நாட்டைவிட்டு குடிபெயருவதற்கான வற்புறுத்தல்களும் தோன்றுகின்றன.[12]

அரசாங்கங்களது சில கொள்கைகள் காரணமாக சில காலகட்டங்களில் மூலதன வாக்கம் மந்றமடைகின்றது. இதனால் தொழிற்பயிற்சி மிக்க தொழிலாளருக்கு சந்தையில் கேள்வி குறைவடைகின்றது. எனவே அவர்கள் தொழில்நாடி வெளிநாடுகளுக்கு குடிபெயருகின்றனர். இவ்வாறான் காரணங்களால் பல ஆபிரிக்க நாடுகள் பெரிதும் பாதிப்புக்குஉள்ளாகியுள்ளன. இன்று எவ்வாறு மூலதனத்திற்கு உலகளாவிய ரீதியில் சந்தை ஏற்பட்டுள்ளதோ அதேபோன்று உயர்தொழில் பயிற்சி பெற்றவர்களும் உலகளாவிய வகையில் சந்தை ஏற்பட்டுள்ளன. பல்கலைக்கழக பேராசிரியர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் தொழில் நிபுணர்கள் பற்றாக்குறையாக காணப்படும் நாடுகளான மலாவி, சூடான், சயர், சம்பியா ஆகிய நாடுகளில் இருந்தும் கூட பெருமளவில் இத்தகைய பயிற்சி பெற்றவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். இதனால் இந்நாடுகளில் அபிவிருத்தி சார்ந்த கொள்கைகள் வீழ்ச்சியடைவதுடன் அவற்றுடன் இணைந்த செலவினங்களும் அதிகரிப்புக்குள்ளாகின்றன. சில சந்தர்ப்பங்களில் இவ்வாறாக குடிபெயர்ந்தவர்கள் தாய்நாட்டில் நிலைமைகள் சீரடையும் போது நாடு திரும்புகிறார்கள். இந்தியாவில் கணனித் தொழில் துறையில் இப்போது ஏற்பட்ட வளர்ச்சிக்கு அங்கே ஏற்பட்டுள்ள வர்த்தகத் தாராளமயக் கொள்கை காரணமாகும். அதனால் ஐக்கிய அமெரிக்கா

போன்ற நாடுகளுக்கு சென்றிருந்த இந்திய கணனித்துறை நிபுணர்கள் தாய்நாடு திரும்பியுள்ளனர். இவ்விரண்டு காரணங்களின் நிமித்தம் இப்போது இந்தியாவில் கணனித் தொழில் சிறப்புற்றுள்ளது.

## தொழிலாளர்கள் குடிபெயரும் நாடுகளின் நிலைமைகள்

தொழிலாளர்கள் குடிபெயர்ந்து செல்லும் நாடுகளும் குறிப்பாக அவற்றின் கைத்தொழில் பொருளாதாரங்கள் அவர்களால் நன்மை அடைகின்றன. கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகள் நோக்கி ஏற்படும் தொழிலாளர்கள் குடிப்பெயர்வுகள் ஊக்குவிக்கப் படுகின்றன. உற்பத்திக் காரணிகளில் பயிற்றப் பட்ட தொழிலாளர்கள், முக்கியமானவர்கள் அவர்கள் தொழில் மையங்களை வந்தடைவதன் காரணமாக அப்பொருளாதாரங்கள் நன்மை அடைகின்றன. முதலிடுபவர்களைப் பொறுத்தமட்டில் தொழில் பயிற்சியற்ற தொழிலாளர்களது வருகையும் கூட அவர்களுக்கு நன்மையினையே அளிக்கின்றது. ஆனாலும் இவ்வகையான தொழிலாளர்கள் செல்லும் நாட்டிலுள்ள தொழில் பயிற்சியற்ற தொழிலாளர்கள் வகுப்பினரது வேதனங்கள் இவர்களது வருகையால் வீழ்ச்சியடைவதனால் அங்கே சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ்வாறு தொழிலாளர்கள் குடிபெயர்வதனால் அவர்கள் சென்றடையும் நாடுகளில் தொழில் பயிற்சியற்ற தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் தொழில் வாய்ப்புக்கள் இவர்களால் பாதிக்கப்படுவதாக கூறுவது ஒரு எளிமைப்படுத்தப்பட்ட விளக்கமாகவே கருதப் படும். குடிபெயர்ந்து வரும் தொழிலாளர்கள் பன்முகப்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சிகளை பெற்றவர்களாகக் காணப்படும் போது அவர்கள் வந்தடையும் நாடுகளின் தொழிற்சந்தைக்கு பல துறைசார்ந்த பயிற்சி மிக்கத் தொழிலாளர்கள் கிடைக்கின்ற நன்மைகள் ஏற்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஆசியா ஆகிய நாடுகளின் பொருளாதாரங்கள் இப்போது இவ்வாறு குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்களது கலாசாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாகவே காணப்படுகின்றன. வேறு சில நாடுகளில் அவ்வாறு குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்களின் இன்றைய பரம்பரையினர் அந்நாடுகளில் மிகவும் இயக்கப் பண்பாடுடையவர்களாகத் திகழ்கின்றனர். அதற்கு ஏற்ற உதாரணங்களாக இந்தோனேசியாவில் உள்ள சீனக் கைத்தொழில் அதிபர்களையும், கனடாவில் உள்ள ஹொங்கொங் வர்த்தகர்களையும், ஆபிரிக்காவில் உள்ள ஜோர்தானிய, இந்திய வர்த்தகர்களையும், வளைகுடா நாடுகளில் பணிபுரியும் ஜோர்தானிய, பாகிஸ்தானிய சிவில் உத்தியோகத்தர்களையும் குறிப்பிட்டுக் கூறலாம். சில நாடுகளில் அந்நாடுகளின் தொழிலாளர்கள் சில வகையான தொழில்களைச் செய்வதனை விரும்புவதில்லை. அத்தகைய தொழில்களை செய்வதற்கு தொழிற்பயிற்சி அற்ற தொழிலாளர்கள் வெளிநாடுகளில் இருந்து குடிபெயர்ந்து வருகிறார்கள். அண்மைக் காலங்களில் குடிபெயர்ந்தவர்களில் 70 வீதமானவர்கள் அவ்வாறன தொழில்களுக்காக சென்றவர்களாவர். வட ஆபிரிக்க நாடுகள், துருக்கி ஆகிய நாடுகளில் இருந்து பிரான்ஸ் நாட்டிற்கு குடிபெயர்ந்து சென்றவர்களில் 60 வீதமானவர்களும், ஜேர்மனிக்கு சென்றவர்களில் 80 வீதமானவர்களும் அவ்வாறு தொழில் பயிற்சியற்றவர்களாகும். இவ்வாறான உதாரணங்களாக இஸ்ரேல் சென்றுள்ள பாலஸ்தீனர்களையும் வளைகுடா நாடுகளுக்கு சென்றுள்ள பாகிஸ்தானியர்களையும், மலேசியா சென்றுள்ள இந்தோனேசியர்களையும், ஆர்ஜென்ரீனா சென்றுள்ள பொலிவியா நாட்டுத் தொழிலாளர்களையும் குறிப்பிட்டுக் கூறலாம்.[13]

இவ்வாறான தொழிலாளர்கள் அந்நாடுகளுக்குச் செல்லாதிருந்தால் அவர்கள் ஏற்றுச் செய்யும் சில வகையான தொழில்கள் ஒன்றில்

இல்லாது போயிருக்கலாம் அல்லது சுதேசத் தொழிலாளர்கள் செய்யும் தொழிலாக அமைந்திருக்கலாம். மலேசியாவின் இறப்பர் தொழிலும் உணவிற்குப் பயன்படுத்தக்கூடிய பனை எண்ணெய் உற்பத்தியும் இந்தோனே சியத் தொழிலாளர்கள் வராதிருந்தால் வளராது போயிருக்கலாம். அது போன்றே தென்னாபிரிக்க சுரங்கத் தொழில்கள், பெருந் தோட்டத் தொழில்கள் என்பனவும் ஸ்பெயின், மலேசியா நாடுகளின் சுரங்கத் தொழில்கள் என்பனவும் மலிவான தொழிலாளர்களின் வருகையினாலேயே தொடர்ந்து செயற் படுகின்றன. இல்லாவிடில் போட்டியான உற்பத்திச் செலவு காரணமாக அவை இல்லாமலும் போயிருக்கலாம்.

வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து செல்லும் தொழில் பயிற்சியற்ற தொழிலாளர் களின் எண்ணிக்கைக்கு சமனான அளவில் அவர்கள் சென்றடையும் நாடுகளில் அவர்களு க்கு தேவையான பொருட்களையும் சேவை களையும் வழங்கக்கூடிய தொழில்களுக்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக் கின்றன. அவ்வாறான சேவைத் தொழில் களில் அதிகரிப்பு ஏற்படாதபோது அந்நாடு களின் தொழிற்பயிற்சியற்ற தொழிலாளர்களுக் கான தொழில் வாய்ப்பு ஏற்படாது விடுவ தனால் அவர்கள் (சுதேசிகள்) பாதிக்கப் படலாம். ஏனெனில் அவ்வாறு போதிய தொழில் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படா விட்டால் அவர்களின் வேதனங்கள் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்துண்டு. ஐரோப்பிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் நோக்கி ஏற்படும் தொழில்பயிற்சியற்ற தொழிலாளர்களின் குடிவரவின் காரணமாக அந்நாடுகள் தொழில்பயிற்சியற்ற தொழிலா ளர்கள் மீது பாதிப்புக்கள் ஏற்பட்டன. இந் நாடுகள் விருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நாம் உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றுமதி செய்வதன் விளைவாக அந்நாடுகளின் தொழிற்பயிற்சியற்ற தொழிலாளர்களைப் பாதிக்கும் அளவுக்கு (51%) சமமானதாகவே இவ்வாறான தொழிலாளர்கள் இங்கே குடி பெயர்ந்து வருகின்றனர் என்றும் கூறப் படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் தொழில் புரியும் 12 வருட பள்ளிப்படிப்புக்கும் குறைந்த அளவில் கல்வி கற்ற தொழிலாளர்களில் 25 வீதமானோர் அந்நாட்டிற்கு வெளியே பிறந்தவர்களாவர். ஐக்கிய அமெரிக்காவில் கடந்த இரு தசாப்தங்களிலே ஏற்பட்ட 30% வேதன சமமின்மையின் அதிகரிப்பிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களே காரணம் என சில ஆய்வுகள் கூறுகின்றன.[14]

வர்த்தகத்தை விட குடிப்பெயர்வுகளே கூடிய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை. சார்பற்ற வர்த்தகம் காரணமாக தொழிலி ழந்த நாட்டவர்கள் தமது தொழிலாளரது குடிப்பெயர்ச்சியின் மூலமாக தமது தொழில் இழப்பிற்கு ஏற்ற நட்ட ஈட்டினை பெற்றுக் கொள்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

## குடிப்பெயர்வுகளை நிர்வகித்தல்

பெரும்பாலான நாடுகள் தமது வர்த்தக அமைப்பில் தாராளமயமாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், அநேகமாக அனைத்து நாடுகளுமே குடிவரவினை பொறுத்தமட்டில் கட்டுப்பாடுகளை விதித்து வைத்திருக்கின்றன. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது வர்த்தகத்தைத் தாராளமய மாக்கலாம் என எவ்வாறு விவாதிக்கின் றோமோ அவ்வாறே தொழிலாளர்களும் தாராளமாக குடிபெயர வேண்டும் என பொருளாதார ரீதியாக விவாதிக்கலாம். அதனால் பொருளாதாரக் காரணிகள் ஒன்று குழுமும் வாய்ப்புக்கள் உருவாக்கப்படலாம் என நம்பலாம். ஆனால் மறுபுறத்தில் சமூக ரீதியான சில முரண்பாடுகளும் உருவாகும் ஆபத்தும் உண்டு. எனவே அதற்காக குறித்த வகையிலான கொள்கை வழிகாட்டிகள் அவசியமாகின்றன. இவை இரண்டினையும் பொறுத்து பொருளாதாரமற்ற வேறுபாடுகள் சிலவற்றைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டும். ஒரு சமூகம் சுயமான கலாசார பண்புகளு டன் தான் இருக்க வேண்டும் என்ற நோக்கில்

செயல்படலாம். ஆனால் பெரியளவில் ஏற்படுகின்ற குடிப்பெயர்வுகள் காரணமாக அந்நோக்கங்களில் பாதிப்புக்கள் ஏற்படலாம். யப்பான் தனது நாட்டிற்குள் பிரேசில் நாட்டில் வாழும் யப்பானியரது குடிவரவினை விரும்புகின்றது. அதே போன்று ஜேர்மனி, கிழக்கைரோப்பிய நாடுகளில் வாழும் ஜேர்மனி யருடைய குடிவரவினையும் விரும்புகின்றது. இவ்விரு நாடுகளும் வேற்று நாட்டவர்கள் தமது நாட்டிற்குள் வருவதனை விட மேற் கூறியவாறு வேற்று நாடுகளில் உள்ள தமது நாட்டினர் வருவதனையே விரும்புகின்றனர்.

தொழிலாளர்களது குடிப்பெயர்வினை நிர்ணயிக்கும் பொருளாதாரக் காரணிகள் வர்த்தகத்திற்கான பொருளாதார நோக்கங் களை நிர்ணயிக்கும் காரணகளிலிருந்து வேறுபடுகின்றது. உதாரணமாக குடிபெயர் பவர்கள் தமது நாட்டில் தாம் கொண்டிருக் கும் உற்பத்தித் திறனை விட குடிபெயரும் நாடுகளுக்கு சென்று கூடிய உற்பத்தித் திறனை வழங்க முடியாது இருந்தாலும் கூட தமது நாட்டில் உழைக்கக் கூடிய வருவாயினை விட குடிபெயரக்கூடிய நாடுகளில் அதிகமாக உழைக்கலாம் என்ற நம்பிக்கை காரணமாக குடிபெயருகின்றனர். வளைகுடா நாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாக உள்ளன. அங்கே பெருமளவில் நிலநெய் இருப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றின் உரிமைகளில் வெளிநாட்டவரது அதிகாரம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்நாடுகள் பல்வேறு கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளதோடு குடிபெயர்ந்து வருபவர்கள் குடியுரிமை பெறும் வாய்ப்புக்களையும் தடை செய்துள்ளன. கைத்தொழிலாக்கம் பெற்றுள்ள நாடுகளோ வேறுவகையான அச்சத்தினைக் கொண்டுள்ளன. குடிபெயர்ந்து வருபவர்கள் அந்நாடுகளில் நடைமுறையில் உள்ள நலன்புரி சேவைகளினால் கவர்ந்து விடுவார்கள் என்ற அச்சம் அந்நாடுகளில் காணப்படுகிறது. வறுமையான அயல்நாடுகளைக் கொண்டதும், நலன்புரி நடவடிக்கைகளை வழங்குவதுமான நாடுகளிலேயே இத்தகைய அச்சம் காணப்படுகிறது. மெக்சிகோ மற்றும் கரிபியன் நாடுகளிலிருந்து குடிப்பெயர்ச்சி ஏற்படுவ தனால் ஐககிய அமெரிக்கா, அல்ஜீரியா போன்ற நாடுகளிலிருந்து பிரான்ஸ் நோக்கிய குடிப்பெயர்வுகளும், துருக்கியிலிருந்து ஜேர்மனி நோக்கிய குடிப்பெயர்வுகளும், குடிவரவு பெறும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளை அச்சத்திற்குள்ளாக்கி யுள்ளன. இத்தகைய பிரச்சினைகள் நடை முறையில் காணப்படுகின்றமை உண்மைதான். இருந்தபோதிலும் இவ்வாறு குடிபெயருபவர் கள் அவர்கள் செல்லும் நாடுகளில் நிதிப் பிரச்சினைகளைப் பெரும் அளவிற்கு உருவாக்குகின்றனர் என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில் குடிவரவு பெறும் நாடுகள் தமது நாட்டிற்குள் வருபவர்களுக்கு பல்வேறு வகையினதான தகுதிகளின் அடிபபடையி லான கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. குறிப்பாக நலன்புரி சேவைகளை வழங்கும் கைத்தொழில் நாடுகள் இவ்வாறான கட்டுப்பாடுகளைப் பெருமளவில் பின்பற்றி வருவதால் குடிபெயருபவர்களும் தாம் விரும்பியவாறு குடிபெயர்ந்து செல்ல முடியாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கைத்தொழில் நாடுகள் யாவுமே தமது நாடு நோக்கிய குடிபெயர்ந்து வருபவர்களை கடுமையான கட்டுப்பாடுகளை அடிப்படை யாகக் கொண்ட தெரிந்தெடுக்கும் முறைகளின் மூலமே உட்புக அனுமதிக்கின்றன. அவற்றில் விசாக் கட்டுப்பாடுகள், நாட்டெல்லையில் பின்பற்றப்படும் தடைக்கட்டுப்பாடுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. குடிவருபவர் களின் வயது, சொத்துக்கள், கல்வித் தரங்கள், அவர்களது பூர்விகத் தேசிய அடையாளங்கள், குடும்பத் தொடர்புகளின் நிலைமைகள் போன்ற பல்வேறு நிலைமைகளையும் அனுசரித்தே இந்நாடுகளுக்கு உட்பிரவேசிக்க அனுமதி வழங்கப்படுகிறது. ஆயினும் ஐக்கிய அமெரிக்காவிற்குள் அண்மைக் காலங்களில் தொழிற்பயிற்சியற்றவர்களும் குடிபுகுந்தத னால் அது அந்நாட்டின் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் பளுவினை ஏற்படுத்தி

யுள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறு குடி பெயர்ந்தவர்கள் இந்நாடு நோக்கி முன்னர் குடிபெயர்ந்தவர்களை விடக் கூடியளவில் அரச சேவைகளைப் பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி நாட்டின் முழுக்குடித்தொகை யினைப் பொறுத்தும் கூட தலா நலன்புரி சேவைகளைப் பொறுத்தமட்டில் கூடியளவு சேவைகளை அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. இவற்றின் காரணமாக குடிவருபவர்களின் மீது தர/ தகுதிக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப் படுகின்றது. அத்துடன் இது மாத்திரமன்றி வேறு காரணிகள் நிமித்தம் வருபவர்களின் எண்ணிக்கையிலும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவைகளும் அந்நாடுகளில் ஏற்பட்டுள்ளன.

பல்வேறு நாடுகளிலும் பெருகி வருகின்ற வறுமை நிலைமைகள் காரணமாகவும் போக்குவரத்து தொடர்பு வசதிகளை மலிவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வளர்ச்சி நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை காரணமாகவும் இப்போது தொழிலாளர்கள் இடப்பெயர்வு பெருமளவில் ஏற்பட்டு வருகின்றது. இதனால் வறுமையான நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகள் நோக்கிய குடிப்பெயர்வுகள் பெருமளவில் ஏற்படுகின்றன. இதனால் வறுமையான நாடுகளில் வாழும் மக்கள் சமூக ரீதியாக தமது பாரம்பரிய பிரதேசங்களி லிருந்து வெளியேறுகின்றனர். இவற்றின் விளைவாக அதிகளவு பாதிப்புக்கள் ஏற்படு கின்றன. திறந்த வர்த்தகத்தினால் ஏற்படும் விளைவுகளை விடக் கூடியளவிலான விளைவு கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான குடிப்பெயர்வுகள் காரணமாக சேவைத் துறைகள் மாத்திரமன்றி வர்த்தகத்திற்கு உரிய பொருட்களிலும் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

பல்வேறு நாடுகளிலும் பெருகி வருகின்ற வறுமை நிலைமைகள் காரணமாக வும் போக்குவரத்து தொடர்பு வசதிகளை மலிவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வளர்ச்சி நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை காரணமாகவும் இப்போது தொழிலாளர்கள் இடப்பெயர்வு பெருமளவில் ஏற்பட்டு வருகின்றது. இதனால் வறுமையான நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகள் நோக்கிக் குடிப்பெயர்வுகள் பெருமள வில் ஏற்படுகின்றன. இதனால் வறுமையான நாடுகளில் வாழும் மக்கள் சமூக ரீதியான தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து வெளியேறுகின்றனர். இவற்றின் விளைவாக அதிகளவு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. திறந்த வர்த்தகத்தினால் ஏற்படும் விளைவு களை விடக் கூடியளவிலான விளைவுகள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறான குடிப்பெயர்வுகள் காரணமாக சேவைத் துறைகள் மாத்திரமன்றி வர்த்தகத்திற்கு உரிய பொருட்களிலும் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

சமூகங்களின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க அல்லது பேண வேண்டுமானால் அதற்கு மிகவும் கூடிய செலவினங்களைக் கொண்ட மறுபரம்பல் முறை தேவைப் படுகிறது. பண்ணை வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வழங்கப்படும் உதவிகள் மூலம் விசேட பண்புகளைக் கொண்ட சில வகைக் கைத்தொழில்களை விருத்தி செய்ய முடியும். முன்னேற்றமிக்கதும் திறமை மிக்கது மான கொள்கைகளை உருவாக்கி அவற்றின் மூலமே இவ்வாறான நோக்கங்களை அடைய முடியும். இதற்கான தொழிலாளர் தட்டுப்பாடு காணப்படும் அளவுக்கு சமனான அளவில் மாத்திரமே குடிவரவினை அனுமதிக்கும் ஏற்பாடுகளை உருவாக்க வேண்டும். அதே நேரத்தில் உள்நாட்டுத் தொழிற் திறமைகள் உயர் நிலைக்குக் கொண்டு செல்லப்படல் வேண்டும். 1960ம் ஆண்டுகளில் ஐரோப்பா வில் பொருளாதார புனருத்தாரணம் ஏற்பட்ட காலப்பகுதிகளில் இவ்வாறான கொள்கைகளே பின்பற்றப்பட்டன.

குடிவரவினைத் தடைசெய்யும் சட்டங் களினால் ஏற்படும் விளைவுகள் எப்போதும் எதிர்பார்த்த விளைவுகளையே ஏற்படுத்துகின் றன எனக் கூறுவதற்கில்லை. ஆனால் சட்ட

விரோத நடவடிக்கைகளின் அதிகரிப்பும் குடிபெயரும் தொழிலாளர்கள் சுரண்டலுக்கா ளாவதும் குறிப்பிடத்தக்க பக்க விளைவுகளா கும். எனவே குடிவரவினைத் தடை செய்வதன் மூலம் ஏற்படும் குடிவரவு கட்டுப்பாட்டுக்கான மாற்று ஏற்பாடுகளை செய்வதிலும் எச்சரிக் கையாக செயற்பட வேண்டியுள்ளது. குடி பெயர விரும்புபவர்களுக்கு பொருத்தமான மாற்று ஏற்பாடுகளும் தேவை. இல்லா விட்டால் சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகரித்து விடுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் நான்கு மில்லியன் பேர் சட்டவிரோதமாகக் குடியேறியிருக்கிறார்கள். ஐக்கிய அமெரிக்கா அதன் அயல்நாடான மெக்சிகோவுடன் நீண்ட பௌதிக எல்லை யினைக் கொண்டிருப்பதே இதற்குப் பிரதான காரணமாகும். அதுபோன்றே ஆபிரிக்காவில் இருந்து மூன்று மில்லியன் பேர் சட்ட விரோதமாக ஐரோப்பிய நாடுகளில் குடியேறியுள்ளனர். இவர்கள் எந்நேரமும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து நாடு கடத்தப் படலாம். இந்நிலை காரணமாக இவ்வாறு சட்டவிரோதமாகக் குடிபெயர்ந்து வந்து குடி யேறியுள்ளவர்கள் அவர்களை தொழில்களில் அமர்த்தியுள்ளவர்களால் பெரிதும் சுரண்டலுக்குள்ளாக்கப்படுகின்றனர். கூடிய நேரம் தொழில்புரியும் இத்தொழிலாளர்கள் குறைந்த வேதனங்களையே பெறுகின்றனர். குடிபெயரும் சீனத் தொழிலாளர்கள் தாம் ஐக்கிய அமெரிக்காவுக்கு வர ஏற்பட்ட செலவினங்களை திருப்பிக் கொடுப்பதற்காக அவர்களை சட்டவிரோதமாகக் கூட்டிவந்தவர் களுக்கு மூன்று வருடகாலம் வேதனங்கள் ஏதுமின்றி உழைக்கின்றனர். இருந்த போதிலும் கூட நாடுகளிடையே காணப்படும் வேதனங்களின் வேறுபட்ட அமைப்பு காரணமாக சீனத் தொழிலாளர்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் இலாபகரமாக தென்படுவதால் தொடர்ந்தும் இவ்வாறான குடிப்பெயர்வுகள் ஏற்பட்டு வருகின்றன.[15]

சட்டவிரோதமாகக் குடிபெயரும் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அதேநேரத்தில் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் வேண்டியுள்ளது. தொழிலாளர்கள் தேவைப்படுகின்ற நாடுகள் தமது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பளு ஏற்படாத வகையில் தொழிலாளர்களைச் சர்வதேச ரீதியாக பெற்றுக்கொள்ள ஏற்றதான ஒரு மாற்று வழி தேவைப்படுகிறது. அதற்கு ஏற்ற உபாயமாக சட்ட ரீதியான முறையில் ஆனால் தற்காலிக ஏற்பாட்டின் கீழ் தொழிலாளர்களைச் சுழற்சி முறையில் பெற்றுக் கொள்வதனைப் பற்றி சிந்திக்கலாம் என தொழில்துறை நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தொழிலாளர்கள் தேவைப் படும் நாடுகளில் தற்காலிக ஏற்பாட்டின் கீழ் தொழிலாளரைத் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமானால், அதற்கு சுழற்சி முறையே பெரிதும் வாய்ப்பான முறையாகத் தென் படுகிறது. ஆனால் அதனை நிர்வாகம் செய்வது என்பது கூடிய செலவினங்களைக் கொண்ட ஒரு செய்முறையாகும். இதனால் குறித்த நாட்டிற்குரியதும் குறித்த தொழிலுக் குரியதுமான பயிற்சித் திறமைகளைக் கொண்ட தொழிலாளரை பெற்றுக் கொள்வ திலும் பிரச்சினைகள் ஏற்படலாம். குடிபெயரு பவர்களின் சுயமான முகாமைத்துவ ஏற்பாடு களின் மூலமே இத்தகைய பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளப்பட முடியும் என்பதற்கு உதாரணங்களும் உள்ளன.

பிலிபைன்ஸ் நாட்டு மருத்துவத் தாதி கள், இலங்கையிலிருந்து செல்லும் வீட்டுப் பணிப் பெண்கள், கொரியாவுக்குச் செல்லும் கட்டிடத் தொழிலாளர்கள் போன்றவர்கள் இவ்வாறு சில சமயங்களில் குடிவரவினைப் பெறும் நாடுகளின் அரசினால் பின்பற்றப் படும் ஒழுங்கு முகாமைத்துவ ஏற்பாடுகள் மூலமும் தற்காலிக குடிப்பெயர்வுகளை மேற்கொண்டு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்கின்றனர். சுவிற்சர்லாந்து, மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர் போன்றவை பிரச்சினையின்றி இவ்வாறான தற்காலிகத் தொழிலாளர்களைப் பெற்றுக் கொண்டன. ஆனால் சில சந்தர்ப்பங்களில்

தற்காலிகத் தொழிலாளர்கள் அந்நாடுகளில் நிரந்தரமானவர்களாகியும் உள்ளனர். இவ்வாறான அனுபவங்கள் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் அதிகமாகும். குடிபெயர்ந்து வருபவர்கள் தொழில் புரியவரும் நாடுகளில் தொடர்ந்தும் வாழும் வாய்ப்புக்களையும் விருப்புக்களையும் குறைப்பதற்காக அவர்களில் தங்கி இருப்பவர்களை அவர்களுடன் இந்நாடுகளில் இணைவதனை அந்நாடுகள் தடைசெய்கின்றன. இதற்காகவே சில நாடுகள் சுழற்சி முறையில் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றன. சவுதி அரேபியா போன்ற நாடுகளில் ஒரு முறை தொழில் புரிந்துவிட்டு மீண்டும் இரண்டாம் முறையாக தொழில் அனுமதி பெறவேண்டுமானால் அதற்கு விசா கட்டணங்கள் மிக அதிகமாக அறவிடப்படுகின்றன.

எவ்வாறாயினும், தொழிலாளர்கள் குடிபெயர்வதனால் அவர்களது தாய்நாடும் அவர்கள் சென்று தொழில் புரியும் நாடுகளும் நன்மையினைப் பெறுகின்றன. ஆயினும் வறுமையான நாடுகளுக்கும், செல்வந்த நாடுகளுக்கும் இடையே ஏற்படுகின்ற பொருட்களினது வர்த்தகம், மூலதனப் பாய்ச்சல் போன்றவகையினதாக பொருளாதாரப் பின்னிய செயல்விளைவினை ஒத்ததாக தொழிலாளர் பெயர்வு இருக்க முடியாது. இருதரப்பட்ட நாடுகளுக்கும் ஓரளவாக மாத்திரம் ஏற்படும் குடிப்பெயர்வுகள் நன்மையளிக்கலாம். ஆனால் கட்டுப்பாடற்றதும் தொழிற் பயிற்சியற்றதுமான தொழிலாளர்களது குடிப்பெயர்வினால் எதிர்மாறான விளைவுகளே ஏற்படுகின்றன.

தொழிற்பயிற்சியற்ற உள்நாட்டுத் தொழிலாளர்கள் குடிவரவு காரணமாக எதிர்நோக்கும் பொருளாதார செலவினங்கள் சார்ந்த பிரச்சினைகளையும் கலாச்சார முரண்பாடுகளையும் மனதிற் கொண்டு செயற்படும் பட்சத்திலேயே தொழிலாளர்கள் குடிப்பெயர்வானது நிலைத்து நிற்கும் செயன்முறையாக இயங்க முடியும். ஆனால் குடிப்பெயர்வினைத் தடைசெய்ய அல்லது கட்டுப்படுத்த முயற்சிக்கும் போது ஏற்கனவே குறிப்பிட்டவாறு தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு அதன் காரணமாக அதிகரித்த வேதனங்கள், சட்டவிரோதமான குடிப்பெயர்வுகள் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. குடிபெயர்வோரது அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவர்கள் தொழில் புரியவரும் நாடுகளில், நடைமுறையில் உள்ள தொழில் சட்டங்கள் எவ்வாறு அந்நாட்டுப் பிரசைகளை பாதுகாக்கின்றனவோ அதேவகையில் குடிபெயர்ந்து வருபவர்களையும் பாதுகாக்கும் வகையில் பின்பற்ற வேண்டும். அது மாத்திரமன்றி சில நாடுகளில் குடிபெயர்ந்து வந்த தொழிலாளர்களுக்கு அந்நாட்டு சுதேச தொழிலாளருக்கு வழங்கப்படும் சமூக நலன் புரி சேவைகளின் நன்மைகள் கிட்டுவதில்லை. இக்குறைபாடுகளும் நீக்கப்பட வேண்டும்.

இவை யாவற்றினையும் மனதிற் கொண்டு பார்க்கும் போது தற்போதைய திறந்த பொருளாதார அமைப்பில் பொருளாதாரம் சிறந்த முறையில் வளர்ச்சி பெறுவதற்கு ஏனைய உற்பத்திக் காரணிகள் போன்று தொழிலாளர்களும் தங்கு தடையின்றி சர்வதேச எல்லைகளை கடந்து சென்று தொழில் புரிய ஏற்றதான வாய்ப்பு வசதிகள் அத்தியாவசியமாகும். ஆனால் அது தொழிலாளர்களை சுரண்டுவதாகவோ அல்லது அவர்கள் செல்லும் நாடுகளின் சமூக, பொருளாதார சமநிலையில் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவோ அமைந்துவிடக்கூடாது.

இப்பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு பார்க்கும் போது, இத்துறைசார்ந்த நிபுணர்கள் சிபாரிசு செய்கின்ற "தற்காலிகத் தொழில் வாய்ப்பு" ஒழுங்கு முறையே சிறந்த தீர்வாகக் காணப்படுகின்றது. பல்வேறு கோணங்களிலும் இத்தீர்வு முறை ஏற்றதாகக் காணப்படுவதால் நாடுகள் இதனை ஏற்று நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் தொழிலாளர்கள் ஏனைய நாடுகளுக்கு குடிபெயர்வதனால் ஏற்படும் பக்க விளைவுகளை குறைந்த பட்சமாக்கலாம் என நம்ப இடமுண்டு.

## அடிக்குறிப்புக்கள்


1. Massey et al., (1990) "The Social and Economic Origin of Immigration ***Journal of the American Academy of Political and Social Science,*** 510 July: pp. 66-72.

2. Bhagwati, Jagdish., (1991), Free Traders and Free Immigrationists: Strangers or Friends", ***Russell Sage Foundation Working Paper***, p.20, New York.

3. Massey et al., (1993), "Theories of International Migration:A Review and appraisal", ***Population and Development Review***, pp. 19(3):431-466.

4. Razin et al., (1994), Population Economics, Cambridge, mass MIT Press.

5. Stalker, Peter., (1994), ***The Work of Strangers: A Survey of International Labour Migration***, Geneva: ILO.

6. Zumimerman., (1995), "European Migration: Push and Pull", ***Proceedings of the WB Annual Bank Conference on Development Economics***, Washington D.C.

7. Zlotnik, (1993), ***International Migration: Causes and Efects***, In Laurie Ann Mazur, California: Island Press.

8. Flanagan, R.J., (1995), "Labour Market Responses to a change in Economic System ***Proceedings of the WB Annual Bank Conference on Development Economics***, Washington D.C.

9. Frindley, Sally, E., (1994), ***To go But Not To Go: Migration and Family Interactions inAfrica***, New York, Columbia University.

10. Adams, Richard, Jr., (1989). "Worker Remittances and Inequality in Rural Egypt", ***Economic Development and Cultural Change***, 38, October, pp. 45-71.

11. The Effects of Migration and Remittances on Inequality in Rural Pakistan, ***The Pakistan Development Review*** 31, (Winter), pp. 1189-1203.

12. Rodriguery et al., (1994), ***International Return Migration and Remittances on the Philippines***, University of Toronto, Department of Economics, Toronto.

13. Horton et al., (1994), Labour markets in an Era ofAdjustments: Vol 1, Issues Paper, ***EDI Development Studies***, Washington. D.C.: WB.

14. Freedom., (1998), Labour Markets Institutions and Economic Performance ***Economic Policy: A European Forum***, (April): pp. 63-80.

15. Kwong, Peter., (1994), "China's Human Traffickers", ***The Nation***, October 17, pp. 422-425.